
இளவரசி தன் தோழிகளுடன் குளத்தில் நீராடிக் கொண்டிருக்க, கரையில் முத்துமாலை இருப்பதை காக்கை பார்த்துக் கொண்டிருந்தது.
காக்கை, இளவரசியின் முத்துமாலையை கொத்திக்கொண்டு பறந்தது
யாரங்கே? … அந்தக் காகம் என் முத்துமாலையை எடுத்துச்செல்கிறது அதைப் பிடியுங்கள்
காவலர்கள் வேல்களுடன் காக்கையை துரத்திக் கொண்டு ஓடினர்
காக்கை, முத்துமாலையைப் பாம்பு இருக்கும் மரப்பொந்தில் போட்டது.
அந்தப் பொந்திலிருந்து பாம்பு தலையை வெளியே நீட்டியது
காவலர்கள் பொந்திலிருந்து பாம்பை அகற்றினர்
பொந்திலிருந்து முத்துமாலையை எடுத்தனர்







**நீதிக் கருத்து : பிறருக்குத் தீங்கு செய்யாமல் வாழ்தல்**

## வாங்க பேசலாம்

- பாம்பு காகத்தின் முட்டைகளை உடைத்தது சரியா? கலந்துரையாடுக.
- காகமும் நாகமும் கதையை உமது சொந்த நடையில் கூறுக.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. காகம் ___________ வாழும்

அ) கூட்டில் ஆ) வீட்டில்

இ) புற்றில் ஈ) மண்ணில்

2. நண்பர்கள் இச்சொல்லின் எதிர்ச்சொல்

அ) அன்பானவர்கள் ஆ) உறவினர்கள்

இ) பகைவர்கள் ஈ) நெருங்கியவர்கள்

3. முத்துமாலை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) முத்து + மாலை ஆ) முத்தும்+ மாலை

இ) முத்தும்+ ஆலை ஈ) முத்து+மலை

4. மரம் + பொந்து இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) மரம்பொந்து ஆ) மரப்பொந்து

இ) மரப்பந்து ஈ) மரபொந்து

QQISMK

## வினாக்களுக்கு விடையளிக்க.

1. காகத்தின் முட்டைகளைப் பாம்பு என்ன செய்தது?
2. பாம்பை அழிப்பதற்காகக் காகம் யாரிடம் ஆலோசனை கேட்டது?
3. 'காகமும் நாகமும் 'கதை உணர்த்தும் நீதி என்ன?

## புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக

நான் ஒரு  வீட்டு விலங்கு ;
இலை, தழைகளை உண்பேன். நான் யார்?





மரத்திற்கு மரம் தாவுவேன்;
வாழைப்பழம் விரும்பி உண்பேன்.. நான் யார்?



கரும்பே எனக்கு உணவாகும்
கருமை எனது நிறமாகும்.– நான் யார்?

## முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடர் உருவாக்குக

1. ஒன்று கொக்கு இருந்தது குளக்கரையில்

_______________________________________

2. எண்ணியது சாப்பிட மீன்களைச்

_______________________________________

3. அனைத்தும் சென்றன விளையாடிச்

_______________________________________

## எந்த உயிரினத்திற்கு என்ன பண்பு?

| உயிரினம் | பண்பு |
|---|---|
|  | ஒற்றுமை |
|  | சுறுசுறுப்பு |
|  | கூட்டமாக வாழும் |
|  | நன்றியுணர்வு |

## மொழி விளையாட்டு

**ஒவ்வோர் எழுத்தாகச் சேர்ப்போமா?**

1. தா

    தாய்

    தாய்மை

2. வா

    ________

    _________

3 தூ

    ________

    _________

4 கா


    ________

    _________

## பெயர் எது? செயல் எது?

| | | பெயர் | செயல் |
|---|---|---|---|
| 1. | குதிரை வேகமாக ஓடியது | _______________ | ____________ |
| 2. | ஆசிரியர் பாடம் நடத்தினார் | _______________ | ____________ |
| 3. | குழந்தை சிரித்தது | __________________________ | |

## கலையும் கைவண்ணமும்






### செயல் திட்டம்

பறவை இறகுகளைச் சேகரித்து வா.

முத்துமாலை படம் வரைந்து வண்ணம் தீட்டி வா

# 23 நல்வழி

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும்அந் நாளும்அவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்– ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து




## பாடல் பொருள்

ஆற்றில் நீர் வற்றியதால், அதன் வறண்ட மணல்பகுதி, வெப்பத்தால் சூடேறி நடப்பவரின் பாதங்களைச் சுடும். அத்தகைய நிலையிலும் அந்த ஆற்று மணலைத் தோண்டுகின்றபோது, சுரக்கின்ற ஊற்றானது, உலக மக்களுக்கு உணவாய் அமையும். அதுபோல, உயர்ந்த குடிப்பிறப்பில் தோன்றியவர்கள், வறுமைநிலையில் வாடினாலும், தம்மிடம் வந்து பொருள் தருக எனக் கேட்பவர்க்கு இல்லை எனக் கூறாது, தம்மால் முடிந்தவரை கொடுத்து உதவுவார்கள்.

## ஆசிரியர் குறிப்பு

நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல நெறிகளைக் கூறுவது, நல்வழி. இந்நூலை இயற்றியவர், ஔவையார். இந்நூலில் கடவுள் வாழ்த்தோடு மொத்தம் 41 வெண்பாக்கள் அமைந்துள்ளன.



## வாங்க பேசலாம்

உங்களிடம் ஒரு பழம்தான் இருக்கிறது. உங்கள் தம்பியும் தங்கையும் அந்தப் பழம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்குப் பழத்தைப் பிரித்துக் கொடுப்பீர்களா? நீங்களே எடுத்துக் கொள்வீர்களா? உங்கள் கருத்தைக் கூறுக.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. 'உலகூட்டும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது____________________

அ) உல+கூட்டும்  ஆ) உலகு + கூட்டும்

இ) உலகு + ஊட்டும்  ஈ) உலகூட்டு + உம்

U57UUV

2. 'அந்நாளும்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

அ) அந் + நாளும்  ஆ) அ + நாளும்

இ) அந்நா + ளும்  ஈ) அந்த + நாளும்

3. 'இசைந்து' இச்சொல்லின் பொருள் ____________________

அ) மறுத்து  ஆ) பாடி

இ) ஒப்புக்கொண்டு  ஈ) உதவி

### இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களைப் பாடலிலிருந்து எழுதுக.

1. ஆற்று – ஊற்று
2. ____________________
3. ____________________

## வினாக்களுக்கு விடையளிக்க.

1. ஊற்று நீரைக் கொடுப்பது எது?
2. நல்வழி என்னும் நூலை எழுதியவர் யார்?
3. நல்ல குடிப்பிறந்தாரின் இயல்பு எத்தகையது?

## பாடலை நிறைவு செய்க

| | | |
|---|---|---|
| ஆற்று | நீரில் | துள்ளியே |
| அழகாய் | நீந்தும் | மீன்களே |
| ____ | ______ | ______ |
| ____ | ______ | ______ |
| ____ | ______ | ______ |
| ____ | ______ | ______ |

## கலையும் கைவண்ணமும்



## பொருத்துக

| | |
|---|---|
| நல்ல | மனம் |
| ஆற்று | குணம் |
| மணல் | நீர் |
| உதவும் | வீடு |

## மொழியோடு விளையாடு

இரண்டாம் எழுத்தை மாற்றிப் புதிய சொல் உருவாக்கலாமா?

1. படம் – பழம், பணம், பதம்
2. நலம் – ----, ----, ----
3. உதவு – ----, ----, ----
4. பத்து – ----, ----, ----
5. குயில் – ----, ----, ----



**சிந்திக்கலாமா?**

ஒருவர் செல்வம் படைத்தவராயிருந்தும் பிறர்க்கு உதவாமல் இருப்பதாக நீங்கள் அறிகிறீர்கள். உதவுவதால் ஏற்படும் நன்மைகளைப் பற்றி அவர்க்கு எப்படி எடுத்துச் சொல்லலாம்?

## அறிந்து கொள்வோம்

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

– திருக்குறள்

ஐயம் இட்டு உண் – ஆத்திசூடி

## எதிர்ச்சொல் எழுதுவோம்


பனிக்கட்டி குளிர்ச்சியாய் இருக்கும்.
நெருப்பு ______ இருக்கும்.




பூனை மேசையின் மேல் இருந்தது.
எலி, மேசையின் -------- இருந்தது.




தங்கை -------- சென்றாள்.
அண்ணன் உள்ளே வந்தான்.

சிறுவன் பேருந்தில் ---------.
சிறுமி பேருந்திலிருந்து இறங்கினாள்.





## பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுப்போமா?

1. ஆற்றின் ஓரம்--------------.ஆடையில் இருப்பது------------ (கறை, கரை)

2. காட்டில் வாழ்வது-----------. கடையில் விற்பது-------------- (புலி, புளி)

3. மனிதர் செய்வது------------. மரத்தை அறுப்பது-------------- (அறம், அரம்)

4. மீனைப் பிடிப்பது------------. கையில் அணிவது------------- (வளை, வலை)

5. பொழுதைக் குறிப்பது---------. பொறுப்பாய்ச் செய்வது---------- (வேலை, வேளை)

6. ஒழுக்கத்தைக் குறிப்பது-------. உணவுப் பயிரைக் குறிப்பது------ (தினை, திணை)

7. உயர்ந்து நிற்பது------------. உனக்குப் பிடிக்கும்------------- (மழை, மலை)

8. வீரத்தைக் குறிப்பது----------. விறகைத் தருவது-------------- (மரம், மறம்)

9. விடிந்த பின் வருவது---------. வீரத்தால் அடங்குவது----------- (காளை, காலை)

10. சான்றோர் வெறுப்பது--------. சாலையில் கிடப்பது------------- (கல், கள்)

# 24 தமிழ்மொழியின் பெருமை

உலகில் உள்ள மொழிகளுள் மிகவும் தொன்மை வாய்ந்தது தமிழ்மொழி. 'அமிழ்தினும் இனிய மொழியாக' நம் தமிழ்மொழி விளங்குகிறது. தமிழ், தமிழ் என்று சொல்லிப் பாருங்கள். உங்கள் காதில் '**அமிழ்து, அமிழ்து** எனத் தேனாய்ப் பாய்வதை உணர்வீர்கள். அதனால்தான், பாரதியாரும்,

'**செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்**
**தேன் வந்து பாயுது காதினிலே** என்று பாடியுள்ளார். மேலும்,

'**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்**'


எனத் தமிழைப் போற்றிப் புகழ்கிறார்.

'**தமிழுக்கு அமுதென்று பேர் – இன்பத்**
**தமிழ்எங்கள் உயிருக்கு நேர்**'

எனப் பாரதிதாசனாரும் தமிழின் பெருமையைக் கூறுகிறார்.

இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் இணைந்தது, முத்தமிழ். இம்மூன்று துறைகளின் கீழ் தமிழ்மொழியின் வெளிப்பாட்டைக் காணலாம்.

எழுத்து நடை வாயிலாக வெளிப்படுவது, இயல்
பாடல்கள் மூலம் வெளிப்படுவது, இசை
அங்க அசைவுகளுடன் வெளிப்படுவது, நாடகம்



பழங்காலத்தில் தமிழர்கள் பயன்படுத்திய மண்பாண்டங்கள், அணிகலன்கள், பண்பாட்டை வெளிப்படுத்தும் ஆடைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ள அகழாய்வுகள் உதவுகின்றன. அண்மையில் சிவகங்கை மாவட்டத்தில் 'கீழடி' என்னுமிடத்தில் நடைபெற்ற அகழாய்வில் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்மொழி 'ஆதித் தமிழர் மொழி' என்பது புலப்படுகிறது.

கணியன் பூங்குன்றனார் எழுதிய '**யாதும் ஊரே, யாவரும் கேளிர்**' என்னும் புறநானூற்றுப் பாடல் தொடர் இன்றளவிலும் ஐக்கிய நாடுகள் அவையில் தமிழ்மொழியின் பெருமையை உலகிற்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

நடுவண் அரசு 12.. 10. 2004 ஆம் ஆண்டு தமிழ்மொழியானது, பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கும் திறனுள்ள 'செம்மொழி' என அறிவித்துள்ளது. இது தமிழ்மொழிக்கு வளமை சேர்ப்பதாக உள்ளது.

தமிழர்களின் வீர விளையாட்டுகளை விளக்கும் பாறை ஓவியங்கள், கல்வெட்டுகளில் காணப்படும் அரசர்களின் கொடை பற்றிய செய்திகள், இலக்கியங்கள் குறிப்பிடும் பண்பாட்டுக் கூறுகள் போன்ற யாவும் தமிழர்களின் வீரம், கொடை, பண்பாடு, விருந்தோம்பல் முதலான பண்புகளைத் தெளிவாக விளக்குகின்றன.

**'தமிழன் என்று சொல்லடா**
**தலை நிமிர்ந்து நில்லடா'**

என்னும் பாடல் வரிகள், தமிழர்களின் பெருமையைக் கூறுகின்றன. தமிழர்களின் எழுத்து, சொல், உணர்வு, ஒழுக்கம், வாழ்வு, பண்பாடு ஆகியவற்றைத் தமிழின் தொன்மை இலக்கணநூலான தொல்காப்பியம் எடுத்துக் கூறுகிறது. உலக மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் சிறப்புப் பெற்று விளங்கும் நூல், திருக்குறள். 'உலகப் பொதுமறை' என்று அழைக்கப்படும் இந்நூலில், தமிழரின் வாழ்வியல் நெறிகள் காணப்படுகின்றன.

தமிழ்மொழியின் சிறப்பை உணர்ந்த அயல்நாட்டார் பலரும் தமிழைக் கற்றுக் கொண்டதோடு, தமிழில் பல இலக்கண, இலக்கியங்களையும் படைத்துள்ளனர். திருக்குறளின் பெருமையை உலகறியச் செய்தவர், ஜி. யு. போப். இவர், ஆங்கிலத்தில் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார். தம்மைத் '**தமிழ் மாணவன்**' என்றே உலகோர் அறியச்செய்தார்.

நம் தாய்மொழியான தமிழ், ஈராயிரம் ஆண்டுக்குமேல் பேச்சிலும் எழுத்திலும் பயன்பாட்டில் இருந்து வருகிறது. நாளும் பொலிவுடன் வளர்தமிழாய் தன் பெருமையை உலக அரங்கில் நிலைநிறுத்தி வருகிறது. ஆகவே, இன்னும் எத்தனையோ ஆண்டுகள் பிறரை வாழ வைக்கவும், வழிநடத்தவும் திறமையுள்ள மொழியாக விளங்கும் நம் தமிழ்மொழியை உலகில் உள்ளோர் பாராட்டும் வகையில் மேன்மேலும் உயர்த்த உறுதுணையாக இருப்போம்.

## வாங்க பேசலாம்

தமிழின் இனிமையைப் பாரதியார் எப்படியெல்லாம் புகழ்கிறார்? கலந்துரையாடுக.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. தமிழுக்கு அமுது என்று பேர் என்று பாடியவர்-----------------

அ) பாரதியார் ஆ) கண்ணதாசன்

இ) கவிமணி ஈ) பாரதிதாசன்

CJL9VD

2. 'செம்மை + மொழி' இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது------------

அ) செம்மொழி ஆ) செம்மொலி

இ) செம்மொளி ஈ) செமொழி

3. 'கீழடி' அகழாய்வு நடந்த மாவட்டம்---------------

அ) புதுக்கோட்டை ஆ) தருமபுரி

இ) சிவகங்கை ஈ) திருச்சி

4. 'ஆதித்தமிழர்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது--------------

அ) ஆதி+ தமிழர் ஆ) ஆதி + தமிளர்

இ) அதி + தமிழர் ஈ) ஆதீ + தமிழர்

5. பொலிவு – இச்சொல்லுக்குரிய பொருள்------------

அ) மெலிவு ஆ) அழகு

இ) துணிவு ஈ) சிறப்பு

## கீழ்க்காணும் சொற்றொடர்களைப் படித்துச் சரி ✓ தவறு X எனக் குறியிடுக.

1. இயல், இசை, நாடகம் ஆகியன தமிழின் பெருமையை வெளிப்படுத்தின [ ]
2. தமிழ்மொழி 'ஆதித்தமிழர் மொழி' இல்லை [ ]
3. 'வீரம்' தமிழரின் பண்புகளுள் ஒன்று [ ]
4. "யாது ஊரே யாவரும் கேளிர்" என்னும் தொடர் ஆத்திசூடியில் உள்ளது. [ ]
5. சிவகங்கையிலுள்ள கீழடியில் அகழாய்வு நடைபெறவில்லை . [ ]

## அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக

தொன்மை – ______________________________

அமிழ்தினும் – ______________________________

ஆபரணம் – ______________________________

செம்மொழி – ______________________________

பறைசாற்றும் – ______________________________

## மொழியோடு விடையாடு

சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்துச் சொல்லை முழுமையடையச் செய்க.

இ | ைச




நா | | க | ம்




பா |




| ழ | டி



## வினாக்களுக்கு விடையளிக்க

1. தமிழ்மொழியின் பெருமைகளுள் இரண்டு எழுதுக.
2. 'கீழடி' அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்கள் யாவை?
3. தமிழரின் பெருமையைக் கனியன் பூங்குன்றனார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார்?
4. தமிழ்மொழி 'செம்மொழி' என்று ஏன் அழைக்கப்படுகிறது?
5. தமிழ்மொழி பற்றி நீவிர் அறிந்த கருத்தை எழுதுக?

## சொல் விளையாட்டு

பழத்திற்குள் உள்ள சரியான சொல்லைத் தெரிவு செய்து, சொற்றொடர் உருவாக்குக.

1.) இயல் என்பது




நடை.

இயல் என்பது, எழுத்து நடை

2.) பாறை ஓவியங்களில் தமிழர்களின்




விளையாட்டுகள் பற்றிய செய்திகள் உள்ளன.

---


3.) பிறமொழி உதவி இல்லாமல் தனித்து இயங்குவதால் தமிழ்மொழி




ஆகும்.

---

4.) நடுவன் அரசு




ஆம் ஆண்டு தமிழைச் 'செம்மொழி' என் அறிவித்தது.

---



**சிந்திக்கலாமா?**

இனியன் தன் நண்பர்களிடம் பிறமொழிகள் கற்பதிலேயே, ஆர்வம் காட்டுவேன் என்று கூறுகிறேன்

வீணா தன் தோழிகளிடம் பிறமொழிகளையும் கற்பேன் தமிழ்மொழிக்கு முதலிடம் தருவேன். ஏனெனில் தாய்மொழியே சிந்திக்கும் திறனை வளர்க்கும் என்கிறாள்

**இனியன், வீணா இவர்களின் பேச்சிலிருந்து நீங்கள் அறிந்து கொள்வது என்ன?**

## உன்னை அறிந்துகொள்

மொழி உணர்வுகளை வெளிப்படுத்த கூட்டமாக வாழும் உதவும் கருவி, இதன்மூலம் மக்கள் கூட்டம் அளவையே குறிக்கும்.ஒலிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்ந்து கருத்தை வெளிப்படுத்துகின்றன.

லிங்குவா என்பது இலத்தின் மொழிச்சொல் இச்சொல் மூலம் லாங்கவேஜ் என்ற சொல் தோன்றியது. இதனைத் தமிழில் நாம் 'மொழி' என அழைக்கிறோம்.

# 25 அறிவூட்டும் தொலைக்காட்சிச் செய்திகள்

ஒருநாள் மாலைப்பொழுது. இளவரசி, பூங்குழலி இருவரும் பள்ளி முடிந்து வீடு திரும்பினர். அப்பொழுது திடீரென்று வானில் ஒலி கேட்டது. மேலே பார்த்ததும் விமானம் ஒன்று பறந்து சென்று கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் வானத்தில் கரு மேகங்கள் சூழ்ந்து பேரொலியுடன் இடி இடிக்கத் தொடங்கியது. அச்சமயம் பெய்த மழைத் தூறல், இளவரசியையும் பூங்குழலியையும் நனைத்தது.

**இளவரசி :** நாம் வீட்டிற்குச் செல்வதற்குள் முழுவதுமாக நனைந்து விடுவோம்போல் இருக்கிறதே! அதோ, அந்த கடையில் சிறிதுநேரம் நின்றுவிட்டு, மழைவிட்டதும் செல்வோமா?

**பூங்குழலி :** சரி. நாமாவது மழையில் நனையாமலிருக்க இங்கே ஒதுங்கி விடுகிறோம். ஆனால், வானில் பறக்கின்றதே விமானங்கள். அவற்றின் பாதையை இந்தக் கருமேகங்கள் மறைக்காதா?

**இளவரசி :** அதனால்தான் விமானம், கருமேகங்களைத் தாண்டி உயரத்தில் பறக்கிறது.



**பூங்குழலி :** அது எப்படி உனக்குத் தெரியும்?

**இளவரசி :** நான் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இதைப் பார்த்தேன். அதில் விமானம் பறப்பது பற்றி விரிவாகக் கூறினார்கள்.

**பூங்குழலி :** அப்படியா? தொலைக்காட்சியில் இது பற்றியெல்லாம் சொல்கிறார்களா?

**இளவரசி :** ஆம். பார்ப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருந்தது. விமானம் உயரத்தில் பறக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. புயல், மேகமூட்டம், இடி, மழை போன்றவற்றால் அதன் பயணம் பாதிக்கப்படுவதில்லை என்பதைக் குறும்படம் மூலம் விளக்கினார்கள்.

**பூங்குழலி :** கேட்பதற்கே வியப்பாக இருக்கிறதே! வேறு என்னென்ன நிகழ்ச்சிகளைத் நீ தொலைக்காட்சிகளில் பார்த்திருக்கிறாய்? மழை, தூறலாகத்தான் இருக்கிறது. பேசிக்கொண்டே செல்வோமா?

**இளவரசி :** கொஞ்சம் பொறு, பூங்குழலி. மழை இன்னும் விடவில்லை. சற்றுநேரம் கழித்துச் செல்வோம். இடிச்சத்தம் காதைப் பிளக்கிறது.

**பூங்குழலி :** இடிதானே இடிக்கிறது. மழை, பெரிதாகப் பெய்யவில்லையே, மழை வந்தால் மரத்தடியில் ஒதுங்கி நின்று விடலாமே!



**இளவரசி :** இல்லை பூங்குழலி. மரத்தடியில் நின்றால், இடிதாக்கி உயிர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்பதைத் தொலைக்காட்சிச் செய்தியில் பார்த்திருக்கிறேன்.

**பூங்குழலி :** ஓ! சரி, சரி.. வேறு என்னவெல்லாம் நீ தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறாய்?

**இளவரசி :** பொம்மைப் படங்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள், செய்து பார்ப்போம் போன்ற ஏராளமான நிகழ்ச்சிகளைக்கூடப் பார்த்திருக்கிறேன்.

**பூங்குழலி :** தொலைக்காட்சி என்றாலே பொழுது போக்கும் ஒரு கருவியென நான் நினைத்திருந்தேன். அதனால்தான் திரைப்படம், திரைப்பாடல்கள், நாடகத் தொடர்கள் போன்றவற்றையே அடிக்கடி பார்க்க நேரிட்டது. ஆனால், நீ கூறியதுபோல் புதிய செய்திகளை அறிந்துகொள்ளவும், அறிவை விரிவு செய்யவும் தொலைக்காட்சி உதவும் என்பதை இப்போது புரிந்துகொண்டேன். இனி, நானும் இவை போன்ற நிகழ்ச்சிகளைப் பார்த்துப் பயனடைவேன்.

**இளவரசி :** மகிழ்ச்சி. இனி, நாள்தோறும் புதுப் புதுச் செய்திகளைத் தோழிகளுக்கு நாம் இருவருமே சொல்லலாம். சரி, இப்போது மழை நின்றுவிட்டது வா, வீட்டுக்குப் போகலாம்.

## வாங்க பேசலாம்

தொலைக்காட்சி, நம் கண்ணுக்கும் காதுக்கும் மட்டுமல்ல, அறிவுக்கும் விருந்தளிக்கும் என்பதைப் பிறருக்கு நீங்கள் எப்படி உணர்த்துவீர்கள்?

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. விமானம் பறப்பது பற்றிய செய்தியை --------வாயிலாக இளவரசி அறிந்து கொண்டாள்.

அ) கணினி ஆ) தொலைக்காட்சி

இ) வானொலி ஈ) அலைபேசி

JCPI9B

2. ஆர்வம் – இச்சொல்லின் பொருள்---------------

அ) வெறுப்பு ஆ) மறுப்பு

இ) மகிழ்ச்சி ஈ) விருப்பம்

3. உயரம் என்ற சொல்லின் எதிர்ச்சொல்___________

அ) குட்டை ஆ) நீளம்

இ) நெட்டை ஈ) நீண்ட

4. தொலைக்காட்சி – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது____________

அ) தொலை + காட்சி ஆ) தொல்லை + காட்சி

இ) தொலைக்+ காட்சி ஈ) தொல் + காட்சி

5. குறுமை + படம் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது---------------

அ) குறுபடம் ஆ) குறுமை + படம்

இ) குறும்படம் ஈ) குறுகியபடம்

## வினாக்களுக்கு விடையளிக்க

1. பூங்குழலியும் இளவரசியும் வானத்தில் எதைக் கண்டனர்?
2. வானில் பறக்கும் விமானம் எதனால் பாதிக்கப்படாது என்று இளவரசி கூறினாள்?
3. இளவரசி தொலைக்காட்சியில் என்னவெல்லாம் பார்த்ததாகக் கூறினாள்?



**சிந்திக்கலாமா?**

இவ்விரு நிகழ்வுகளில் சரியான செயல் எது என்று நீ நினைக்கிறாய்?

## ஒரு சொல் இரு விடை எழுதுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| விமானம் | ← | உயரே பறப்பது | → | பட்டம் |
| | ← | தூக்கி எறிவது | → | |
| | ← | இரவில் வருவது | → | |
| | ← | மிதித்தால் இயங்குவது | → | |

# கதையைப் படித்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.

தவளை ஒன்று மிகவும் உடல்நலம் குன்றியிருந்தது. அதன் குட்டித் தவளை தன் தாயைக் காப்பாற்ற நினைத்தது. மாலைநேரம் முடிவதற்குள் மலைமேல் ஏறி, மூலிகை கொண்டு வர நினைத்தது. அந்த மலையில் ஏராளமான பாம்புகள் வாழ்ந்து வந்தன. பாம்புகளால் தனக்கு தீங்கு நேரிடும் என்று நினைத்தது குட்டித் தவளை. தன் அறிவைப் பயன்படுத்திச் சென்றால்தான் மாலைக்குள் திரும்ப முடியும் என்று நினைத்தது. மலையில் ஏறத் தொடங்கியதும், அந்தக் குட்டித் தவளை பேசத் தொடங்கியது. "முன்னே செல்லும் பருந்தாரே! பின்னே பெரிய கீரியார் மெள்ள வருகிறார், சற்றுப் பொறுத்தே செல்லுங்கள்" என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே சென்றது. பாம்புகள் குட்டித்தவளை கூறுவதைக் கேட்டு ஓடி ஒளிந்துகொண்டன. குட்டித்தவளை, தன் கூர் சிந்தனைத்திறனால் காலம் கடத்தாமல் விரைந்து சென்று, மூலிகை கொண்டு வந்து தன் தாயைக் காப்பாற்றியது.

1. உடல்நலம் குன்றிய நிலையில் எது இருந்தது?
2. குட்டித்தவளை, தனக்கு யாரால் தீங்கு ஏற்படும் என நினைத்தது?
3. குட்டித்தவளை தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, எந்தெந்தப் பெயர்களைக் கூறியது?
4. குறித்த நேரத்திற்குள் ஒரு செயலைச் செய்து முடிப்பது எதைக் குறிக்கும்?

   அ) பணிவு ஆ) காலந் தவிர்க்காமை இ) நேர்மை

5. கீழ்வரும் சொற்றொடர்களை சரியா? தவறா? எனக்கண்டறிந்து சரி என்றால் பச்சை பலூன் ( ) தவறு என்றால் சிவப்பு பலூன் ( ) வண்ணமிடுக

   1 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அருகே அமர்ந்து பார்க்கலாம்

   2. வெண்மேகங்களால் மழை பொழியும்

   3. இடிமின்னலின் போது மரத்தடியில் நிற்கக்கூடாது

   4. புயல் அடிக்கும்போது மீனவர்கள் கடலுக்குள் செல்லலாம்

## உன்னை அறிந்துகொள்

தொலைக்காட்சியைக் கண்டறிந்தவர்
ஜான் லோக் போர்டு

விமானத்தைக் கண்டறிந்தவர்கள்
ஆல்பர்ட் ரைட், வில்பர்ட் ரைட்

வானொலியைக் கண்டறிந்தவர்
மார்க்கோனி

## சொந்த நடையில் கூறுக.

தொலைக்காட்சியின் நன்மைகளைப் பற்றி உம் சொந்த நடையில் கூறுக



### செயல் திட்டம்

- தொலைக்காட்சியில் இடம்பெறும் கல்வி பற்றிய செய்திகளைத் தொகுத்து வருக
- உன் சுற்றுப்புறத்தில் உள்ள பொருள்களை வரைந்து அவற்றின் பெயர்களை எழுதி வருக.

# கலையும் கைவண்ணமும்

## மின்அட்டையில் வாழ்த்து அட்டை உருவாக்குதல்

தேவையான பொருள்கள்

மின் அட்டை

பசை

வண்ண நூல்கள்

- மின் அட்டையின் ஓரங்களில் வண்ண நூல்களை ஒட்டி அலங்காரம் செய்யவேண்டும்.
- தமக்குப் தேவையான படம் வரைந்து அதன் மேல் வண்ண நூல்களை ஒட்ட வேண்டும்.
- தேவையான வாழ்த்துச்செய்தியை அட்டையின் நடுப்பகுதியில் எழுதி, வாழ்த்து அட்டை உருவாக்குக.

# அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1. | அறிஞர் | – | அறிவில் சிறந்தவர் |
| 2. | ஆன்றோர் | – | பெரியோர் |
| 3. | இரவாது | – | பிறரிடம் கேட்டுப் பெறாது |
| 4. | ஈதல் | – | கொடுத்தல் |
| 5. | உரைத்தல் | – | சொல்லுதல் |
| 6. | ஒலி | – | சத்தம் |
| 7. | ஒளி | – | வெளிச்சம் |
| 8. | கதிரவன் | – | சூரியன் |
| 9. | களிப்பு | | மகிழ்ச்சி |
| 10. | காலை | – | சூரியன் உதிக்கும் நேரம் |
| 11. | காளை | – | எருது |
| 12. | கூட்டம் | – | கும்பல் |
| 13. | சேகரித்தல் | – | ஒன்று திரட்டுதல் |
| 14. | சேர்த்தல் | – | இணைத்தல் |
| 15. | தகுதி | – | தரம் |
| 16. | தெளிவாக | – | விளக்கமாக |
| 17. | நித்திலம் | – | முத்து |
| 18. | நூல் | – | புத்தகம் |
| 19. | நேர்மை | – | உண்மை |
| 20. | பகைவர்கள் | – | எதிரிகள் |
| 21. | பணி | – | வேலை |
| 22. | பல்லி | – | ஒரு சிறிய உயிரி |
| 23. | பள்ளி | – | கல்வி கற்கும் இடம் |
| 24. | மிக்காரை | – | உயர்ந்தோரை |
| 24. | முயற்சி | – | ஊக்கம் |

# அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1 | அதிகம் | - | மிகுதி |
| 2 | அமர்ந்த | - | உட்கார்ந்த |
| 3 | ஆணவம் | - | செருக்கு |
| 4 | ஆபரணங்கள் | - | அணிகலன்கள் |
| 5 | ஆலோசனை | - | கருத்து |
| 6 | ஆனந்தம் | - | மகிழ்ச்சி |
| 7 | இலாபம் | - | வருமானம் |
| 8 | என்பு | - | எலும்பு |
| 9 | எழில் | - | அழகு |
| 10 | ஏய்த்தல் | - | ஏமாற்றுதல் |
| 11 | களிப்பில் | - | மகிழ்ச்சியில் |
| 12 | சத்தம் | - | ஒலி |
| 13 | சந்தேகம் | - | ஐயம் |
| 14 | சுகம் | - | நலம் |
| 15 | சுதந்திரம் | - | விடுதலை |
| 16 | செல்வந்தன் | - | பணக்காரன் |
| 17 | செல்வாக்கு | - | சொல்லுக்கு மதிப்பு |
| 18 | ஞாலம் | - | உலகம் |
| 19 | தண்டோரா | - | முரசறைந்து செய்தி தெரிவித்தல் |
| 20 | தந்திரம் | - | சூழ்ச்சி |
| 21 | தபால் | - | அஞ்சல் |
| 22 | நிபந்தனை | - | கட்டளை |
| 23 | நீராடலாம் | - | குளிக்கலாம் |
| 24 | நெறிப்படுத்துதல் | - | வழிகாட்டுதல் |
| 25 | பரவசம் | - | மகிழ்ச்சி |
| 26 | பிரமாதம் | - | பெருஞ்சிறப்பு |
| 27 | புத்திசாலி | - | அறிவாளி |
| 28 | வருடுதல் | - | தடவுதல் |
| 29 | வியாபாரி | - | வணிகர் |
| 30 | விவசாயி | - | உழவர் |
| 31 | விவாதம் | - | தருக்கம் |

# அகர முதலி

| | | | |
|---|---|---|---|
| 1 | அகழாய்வு | - | நிலத்தைத் தோண்டி ஆராய்தல் |
| 2 | அசடு | - | பேதைமை |
| 3 | அடையாளம் | | இனங்காணல் |
| 4 | அவசரம் | | விரைவு |
| 5 | ஆதி | | முதல் |
| 6 | ஆர்வம் | | விருப்பம் |
| 7 | இசைந்து | | ஏற்றுக்கொண்டு |
| 8 | இல்லம் | | வீடு |
| 9 | ஏராளமான | | நிறைய |
| 10 | குற்றம் | | மாசு/ தவறு |
| 11 | கேளாமல் | | கேட்காமல் |
| 12 | கோபம் | | சினம் |
| 13 | தகவல் | | செய்தி |
| 14 | நஷ்டம் | | வருமானம் இழப்பு |
| 15 | நல்கூர்ந்தார் | | வறுமையுற்றவர் |
| 16 | பதில் | | விடை |
| 17 | பாதிப்பு | | விளைவு |
| 18 | பயம் | | அச்சம் |
| 19 | பொலிவு | | அழகு |
| 20 | மௌனம் | | அமைதி |

# கற்றல் விளைவுகள்

<table>
<tr><td rowspan="4">கேட்டல்</td><td>கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களையும், கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்வர்.<br>அவற்றின் மீதான கருத்தினை/ நோக்கினை வெளிப்படுத்துவர்.</td></tr>
<tr><td>தம்மைச்சுற்றி நடைபெறும் உரையாடல்களையும் விவரிப்புகளையும் கேட்டுப் புரிந்து கொள்வர்.</td></tr>
<tr><td>வாய்மொழியிலான வருணனைகள், புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகள் ஆகியவற்றைக் கேட்டுப் புரிந்து கொள்வர்.</td></tr>
<tr><td>வானொலி தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டுப் புரிந்து கொள்வர்.</td></tr>
<tr><td rowspan="5">பேசுதல்</td><td>அறிந்த/கேட்ட கதைகளைக் கலவைத்தொடரில் பேசுவர்.</td></tr>
<tr><td>பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுவர்.<br>கேட்டுணர்ந்த கதை, கதைப்பாடல்களின் தலைப்புகள், கதை மாந்தர்கள் பற்றி வினாக்கள் கேட்டல், கருத்தாடல் செய்து கருத்துகளை வெளிப்படுத்துவர்.</td></tr>
<tr><td>தமக்கு அறிமுகமான, செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும், தங்குதடையின்றியும் விவரித்துக் கூறுவர்.</td></tr>
<tr><td>கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துவர்.</td></tr>
<tr><td>பண்புடன் உரையாடுவர்.</td></tr>
<tr><td rowspan="7">படித்தல்</td><td>தெளிவான ஒலிப்புடன் குறில் – நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படிப்பர்.</td></tr>
<tr><td>எளிய தொடர்களைத் தங்குதடையின்றிப் படிப்பர்.</td></tr>
<tr><td>முற்றுப் புள்ளி, வினாக் குறி ஆகிய நிறுத்தக்குறியீடுகளை அறிந்து படிப்பர்.</td></tr>
<tr><td>மூன்று அல்லது நான்கு தொடர்களைக் கொண்ட சிறுசிறு உரைப்பகுதிகளைப் படித்து வினாக்களுக்கு விடையளிப்பர்.</td></tr>
<tr><td>சூழல் சார்ந்து, புதிய சொற்களின் பொருள் புரிந்து படிப்பர்.</td></tr>
<tr><td>படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு அவற்றின் சரியான பொருளை அறிந்துகொள்ள முயல்வர்.</td></tr>
<tr><td>படிக்கும் பகுதியில் இடம்பெறும் பெயர்ச்சொல், வினைச்சொல், பதிலிப் பெயர்ச்சொல் போன்ற நுட்பங்களைப் புரிந்துகொள்வர்.</td></tr>
</table>

| | |
|---|---|
| எழுதுதல் | உரிய வடிவத்தில், முறையான இடைவெளியிட்டு எழுதுவர். |
| | செய்தி/ உரைப்பகுதி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து, கருத்து தெரிவிப்பர். கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவர். |
| | புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுவர். |
| | அறிந்த சொற்களைக் கொண்டு, தமக்கான நடையில், நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறுசிறு தொடர்கள் எழுதுவர். |
| நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல் | இன எழுத்துகளை அறிந்துகொள்வர்.<br>வல்லினம், மெல்லினம், இடையினம் எழுத்துகளை அறிவர் (பெட்டிச்செய்தி)<br>ஒருமை, பன்மை வேறுபாடு அறிவர் ( அது – அவை) |
| | இரு திணை அறிந்துகொள்வர். (உயர்திணை, அஃறிணை) |
| கற்கக் கற்கும் திறன்கள் ( தானே கற்றல்) | சிறுவர்களுக்கான படவிளக்க அகரமுதலியைப் பயன்படுத்துவர்.<br>கணினியில் குழந்தைகளுக்கான புதிர்கள், மொழி விளையாட்டுகள் விளையாடி மகிழ்வர்.<br>படக்கதைகளைத் தேடிப் படிப்பர். |
| சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும் | கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்<br>உணவுப் பொருள்களின் பெயர்கள்<br>ஆடை வகைகளின் பெயர்கள்<br>அணிகலன்களின் பெயர்கள்<br>மரம், செடி, கொடிகளின் பெயர்கள்<br>பொது இடங்களின் பெயர்கள் (பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவமனை…)<br>தன் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு ஆகியவற்றின் பெயர்கள்<br>இன்றியமையா ஆளுமைகளின் பெயர்கள் (நாட்டின் பிரதமர், குடியரசுத் தலைவர், முதலமைச்சர், ஆளுநர், கல்வி அமைச்சர்…)<br>பழமொழிகள்<br>மரபுத் தொடர்கள் |
| | சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காகப் படிப்பர்<br>சிறுவர்களுக்கான பெரிய எழுத்து படக்கதைகள்<br>சொல் விளையாட்டுகளில் பங்கேற்பர் |

| | |
|---|---|
| படைப்புத் திறன்கள் | ஒரே சொல்லில் தொடங்கும், முடியும் பல்வேறு சொற்களை உருவாக்க அறிந்துகொள்வர்.<br>கதையைத் தொடர்ந்து கூறி முடிப்பர். |
| விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுவர் | காலம் தவிர்க்காமை<br>விதிகளைப் பின்பற்றுதல்<br>தூய்மை பேணுதல்<br>பொருள்களைப் பாதுகாத்தல்<br>பிறர்க்கு உதவுதல்<br>பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>கூட்டுணர்வு<br>நட்புணர்வு<br>உண்மை பேசுதல்<br>சேமிப்பு உணர்வு |
| வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து செயல்படுவர் | தன்னை அறியும் திறன்<br>சிக்கல் தீர்க்கும் திறன்<br>முடிவெடுக்கும் திறன்<br>கூர்சிந்தனைத் திறன்<br>படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>சிறந்த தகவல் தொடர்புத் திறன்<br>இணக்கமான உறவுக்கான திறன்கள்<br>பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன்<br>உணர்வுகளைக் கையாளும் திறன்<br>மன அழுத்தத்தைக் கையாளும் திறன் |

## தமிழ் – நான்காம் வகுப்பு
## நூல் ஆக்கம்


**கல்வி ஆலோசகர்**

**முனைவர். பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**மேலாய்வாளர்கள்**

**திருமதி ஆ.சே.பத்மாவதி**,எழுத்தாளர், சென்னை.

**திருமதி பா. மலர்விழி**, விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவூர், திருவள்ளூர்.

**திரு சி. பன்னீர்செல்வம்**, கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர், ஒருங்கிணைந்த கல்வி, புதுக்கோட்டை.

**திரு இல. சீனிவாசன்**, முதுகலை ஆசிரியர், மஜ்ஹருல் உலும் மேனிலைப்பள்ளி, ஆம்பூர், வேலூர் மாவட்டம்.

**ஒருங்கிணைப்பாளர்கள்**

**முனைவர். கா.சா. மொழியரசி,** முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழப்பழுவூர், அரியலூர்.

**திரு ந. இராமலிங்கம்**, உதவிப் பேராசிரியர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**தே.விமலா தேவி,** விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

**கலை மற்றும் வடிவமைப்புக்குழு**

**பக்க வடிவமைப்பு**

சந்தோஷ்குமார் சக்திவேல்
திருவாரூர்.

**வரைபடம்**

**ரா.ஷாலினி**
**வை.மை.பிராங்க் டீஃப்**
**பா. ரவிகுமார், ஈரோடு.**
**செ. ரமேஷ்,**

**தரக்கட்டுப்பாடு**

**ராஜேஷ் தங்கப்பன்**
**காமாட்சிபாலன் ஆறுமுகம்**
**பிரசாந்த் பெருமாள்சாமி**

**வடிவமைப்பு ஒருங்கிணைப்பாளர்**

**ரமேஷ் முனிசாமி**

**பாடநூல் உருவாக்கக் குழு**

**திருமதி பெ. முருகராணி**, இடைநிலை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, இடைச்செருவாய், கடலூர் மாவட்டம்.

**திருமதி அர. அனுசுயா தேவி,** இடைநிலை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, சாலையம்பாளையம், விழுப்புரம் மாவட்டம்.

**திருமதி க. மல்லிகா**, தலைமை ஆசிரியை, ஊ. ஒ. தொ. பள்ளி, அயன்புத்தூர், திருவெறும்பூர், திருச்சி மாவட்டம்

**திரு. பா.ச. குப்பன்**, இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, அய்யன்தாங்கல், காவேரிப்பாக்கம் ஒன்றியம், வேலூர் மாவட்டம்.

**திரு. அ. மாணிக்கம்**, இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, ஆலங்குடி, அறந்தாங்கி ஒன்றியம், புதுக்கோட்டை.

**திருமதி. ந. பரிமளா**, தலைமைஆசிரியர், அம்பத்தூர் நகராட்சி தொடக்கப் பள்ளி, வரதராஜபுரம், வில்லிவாக்கம் ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

**திரு. வெ. பாலமுருகன்**, பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, ஆரம்பாக்கம், திருவள்ளூர் மாவட்டம்.

**திரு. ந. மாமலைவாசன்**, பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, இராயபுரம், திருவாரூர் மாவட்டம்.

**திரு. வெ. ராஜா**, இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. ந.நி. பள்ளி இராக்கியாம்பட்டி, கொங்கணாபுரம், சேலம்.

**திரு. கு. மனத்துணைநாதன்**, இடைநிலை ஆசிரியர், ஊ. ஒ. தொ. பள்ளி, கீழ்வேளூர், நாகை மாவட்டம்

**திரு. பெ. கார்த்திகேயன்**, இடைநிலை ஆசிரியர் ஊ. ஒ. தொ. பள்ளி, சிங்கிலியன் கோம்பை, நாமகிரிப் பேட்டை ஒன்றியம், நாமக்கல் மாவட்டம்

**விரைவுக்குறியீடு மேலாண்மைக்குழு**

**இரா. ஜெகநாதன்**, இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி, கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை.

**ஆ.தேவி ஜெஸிந்தா**, ப.ஆ, அ.உ.நி.பள்ளி, என்.எம்.கோவில், வேலூர்

**வ. பத்மாவதி**, ப.ஆ, அ.உ.நி. பள்ளி, வெற்றியூர், திருமானூர், அரியலூர்.